www.StudyGuideIndia.com

A.I Sep-2014

**8551**

Register Number

# தமிழ்

நேரம் : $2\frac{1}{2}$ மணி ]  [ மொத்த மதிப்பெண்கள் : 100

1. கடின பதத்திற்குப் பொருள் தருக : $8 \times \frac{1}{2} = 4$

அ) பராபரம்  ஆ) ஒன்னார்க்கு

இ) நலியும்  ஈ) மல்லல்

உ) திறல்  ஊ) கேணி

எ) பழனம்  ஏ) திரு.

2. சேர்த்து எழுதுக : $2 \times 1 = 2$

அ) வெம்மை + கதிர்  ஆ) பார் + அதிர.

3. பிரித்து எழுதுக : $2 \times 1 = 2$

அ) நல்லொழுக்கம்  ஆ) ஈழமின்னல்.

4. வாக்கியத்தில் அமைத்து எழுதுக : $3 \times 1 = 3$

அ) எண்ணிறந்த

ஆ) நெடுநேரம்

இ) ஓயாமல்.

5. எவையேனும் இரண்டினைப் பிழை திருத்தம் செய்க : $2 \times 1 = 2$

அ) குதிரை கத்தும்

ஆ) நான் நாளை வந்தேன்

இ) ஆசிரியரும் மாணவனும் வந்தன.

6. வினைப் பகுதி தருக : $2 \times \frac{1}{2} = 1$

அ) பாடினார்  ஆ) தாங்கினான்.

7. தொழிற் பெயர் தருக : $2 \times \frac{1}{2} = 1$

அ) உணர்  ஆ) ஏங்கி.

8. பாரதியார் மொழியையும் இனத்தையும் போற்றுகின்றார்.

( செயப்பாட்டு வினை வாக்கியமாக மாற்றுக ) 2

9. தருமம் தலை காக்குமா ?

( செய்தி வாக்கியமாக மாற்றுக ) 2

[ Turn over

www.StudyGuideIndia.com

10. கற்கண்டை வாயிலிட்டுச் சுவைத்து உண்டாலன்றி, அதன் சுவையை உணர இயலாது.
( உடன்பாட்டு வாக்கியமாக மாற்றுக ) 2

11. வழக்கம் போல் மாமனும் மருமகனும் தேன் எடுக்கப் புறப்பட்டார்கள். மருமகன் தான் மறைத்து வைத்திருந்த தேன்கூட்டை எடுப்பதற்குப் பாறையின் அருகே விரைந்து சென்றான்.
( நிகழ்கால வாக்கியமாக மாற்றுக ) 2

12. திருக்குறள் நாம் அறிய வேண்டும். பொருளனைத்தையும் எளிதில் அடையுமாறு திரட்டித் தருகிறது. நமக்கு எய்ப்பினில் வைப்பாக விளங்குகிறது.
( ஒரே வாக்கியமாக மாற்றி எழுதுக ) 2

13. எவையேனும் **இரண்டனுக்கு** உறுப்பிலக்கணம் தருக : 2 × 1 = 2

அ) வந்தார் ஆ) கொள்வோம்

இ) கூறினான் ஈ) வருந்தி.

14. சீர் பிரித்து அலகிட்டு வாய்பாடு கூறுக : 3

படியுடையார் பற்றமைந்தக் கண்ணும் மடியுடையார்
மாண்பயன் எய்தல் அரிது.

15. எவையேனும் **நான்கு** சொற்களுக்கு இலக்கணக் குறிப்பு தருக : 4 × 1 = 4

அ) ஆண்ட ஆ) தீது

இ) இராப்பகல் ஈ) இழந்து

உ) மின்னல் ஊ) ஆருயிர்.

16. எவையேனும் **ஆறு** இலக்கண வினாக்களுக்கு விடையளிக்க : 6 × 2 = 12

அ) வேற்றுமை அணியினைச் சான்றுடன் விளக்குக.

ஆ) அடி என்றால் என்ன ? அதன் வகைகள் யாவை ?

இ) முல்லைக்குரிய கருப்பொருட்கள் இரண்டினைக் கூறுக.

ஈ) மெய் முன் உயிர் எவ்வாறு புணரும் ? சான்று தருக.

உ) இரண்டாம் வேற்றுமை எவ்வெப் பொருள்களில் வரும் ?

ஊ) பதம் என்றால் என்ன ? அதன் உறுப்புகள் யாவை ?

எ) வினைமுற்று என்பது யாது ? சான்று தருக.

ஏ) பால் என்பது யாது ? அதன் பிரிவுகள் யாவை ?

17. அடி பிறழாமல் எழுதுக :

அ) 'உலகம் ...' எனத் தொடங்கும் தேம்பாவணிப் பாடல். 4

ஆ) 'சங்கரன் ...' எனத் தொடங்கும் பெரியபுராணப் பாடல். 4

இ) 'நெடுநீர் ...' எனத் தொடங்கும் திருக்குறள். 2

www.StudyGuideIndia.com

18. எவையேனும் இரண்டு செய்யுட்களுக்குத் திரண்ட கருத்து எழுதுக : 2 × 2 = 4

அ) 'நல்லார்கண் பட்ட வறுமையின் இன்னாதே
கல்லார்கண் பட்ட திரு'

ஆ) அன்னம் வைகும் வயல்பழ னத்தணி
யாரூ ரானை மறக்கலு மாமே.

இ) களையாத துன்பம் இக்காரிகைக்குக் காட்டி
வளையாத செங்கோல் வளைந்தது இதுவென் கொல் ?

19. கீழ்வரும் பாடலின் பொருள் தெளிந்து கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளி. 4 × 1 = 4

'நீதிநெறி வழுவாமல் நிற்க வேண்டும்
நெஞ்சார உண்மைதனைப் பேச வேண்டும்
ஓதிமறை உயர்ந்தவரை மதிக்க வேண்டும்
ஒப்பற்ற ஆசான்சொல் கேட்க வேண்டும்
ஆதியிலே வாழ்ந்தமுறை நினைக்க வேண்டும்
ஆபத்தில் உற்றவர்க்கு உதவ வேண்டும்
சோதி வடிவானவனைச் சொல்ல வேண்டும்
சுகம் பெறவே வாயார வாழ்த்த வேண்டும்.

வினாக்கள் :

அ) எந்த நெறி வழுவாமல் நிற்க வேண்டும் ?

ஆ) உண்மையை எவ்வாறு பேச வேண்டும் ?

இ) யாருடைய சொல்லைக் கேட்க வேண்டும் ?

ஈ) சுகம்பெற யாரை வாழ்த்த வேண்டும் ?

20. ஏதேனும் ஒன்றினை இடஞ்சுட்டி விளக்குக : 1 × 3 = 3

அ) ''மாசூர மாய்ந்து கெடும்''

1. இவ்வடி திருக்குறளில் எந்த அதிகாரத்தில் உள்ளது ?
2. எது மாசூர மாய்ந்து கெடும் ?
3. எந்த மாசு ஏற்படக் கெடும் ?

*அல்லது*

ஆ) ''கொடியின் கூட்டம்
விண்ணதிரப் பறந்தனவாம் ! ஆயுதங்கள்
விழியதிர மின்னினவாம்''

1. விண்ணதிரப் பறந்தது எது ?
2. ஆயுதங்கள் எவ்வாறு மின்னின ?
3. இச்செய்யுளை இயற்றிய ஆசிரியர் எவ்வருடம் பிறந்தார் ?

[ Turn over

www.StudyGuideIndia.com

21. எவையேனும் **ஆறு** வினாக்களுக்கு விடையளிக்க. 6 × 2 = 12

அ) உண்மையான அழகுடையவர் என்று எவரைச் சொல்லலாம் ?

ஆ) சங்க இலக்கியங்கள் கூறும் செய்திகள் யாவை ?

இ) 'மாடு' என்றால் செல்வம் என்பதை விளக்க வந்த குறள் யாது ?

ஈ) வேள் பாரிக்கு எதன் மூலம் நெற்கதிர்கள் கிடைத்தன ?

உ) தருமம் என்ற ஜீவவிருட்சத்தின் கிளைகளாகக் காணப்படுபவை யாவை ?

ஊ) நல்ல நாடு அமைய ஔவை கூறும் கருத்து யாது ?

எ) சமுதாய முன்னேற்றப் பணிகளில் கணிப்பொறியின் பங்கு யாது ?

ஏ) யாரைக் குடிப்பிறந்தார் என்ற குறள் சிறப்பித்துக் கூறுகிறது ?

22. ஏதேனும் **ஒன்றனுக்கு** விரிவான விடையளி. 7

அ) தமிழின் சிறப்பு எங்ஙனம் விளக்கப்பட்டுள்ளது ?

ஆ) 'மெய்ப்பொருள் காண்பதறிவு' என்னும் கருத்தினை, அறிஞர் அண்ணாவின் வழிநின்று விளக்குக.

இ) மனவலிமை பற்றி மு. வ. கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

23. ஏதேனும் **ஒரு** தலைப்பிற்குக் கட்டுரை வரைக. 5

அ) செய்தித்தாள்

ஆ) முயற்சி திருவினை ஆக்கும்

இ) ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு.

24. ஏதேனும் **ஒன்று** பற்றிக் கடிதம் வரைக : 5

(கடிதத்தில் நும் பெயர், பதிவெண் மற்றும் முகவரி ஆகியவற்றை எழுதுதல் கூடாது.)

அ) உன் தெருவில் உள்ள குப்பைகள் அகற்றப்படாமல் இருப்பதை அறிவித்து, மாநகராட்சித் தலைவருக்குக் கடிதம் எழுதுக.

*அல்லது*

ஆ) புதிதாகக் கட்டப்பட்ட வீட்டிற்கு மின் இணைப்பு வேண்டி, மின்சார வாரியத்தின் இணைப் பொறியாளருக்கு ஒரு விண்ணப்பம் எழுதுக.

*அல்லது*

இ) இன்பச் சுற்றுலா சென்று வந்தது குறித்து உன் நண்பனுக்கு ஒரு கடிதம் எழுதுக.

25. கீழ்க்காணும் ஆங்கிலச் சொற்றொடர்களுக்கு மொழியாக்கம் தருக : 1 + 1 + 2

அ) Knowledge is power

ஆ) Pen is mightier than the sword

இ) We must have a goal in our life. We must believe that we can achieve greatness. We must love our work and do it with confidence and courage.

www.StudyGuideIndia.com